22 | T | I

# "GEO" Published

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2020 ஆவணி**

**General Certificate of Education (Adv. Level) Examination, August – 2020**

# மாதிரிப் பரீட்சை –03

புவியியல் - I
Geography - I

Teacher:-
M.Sujinthan, BA(Hons) Spl.Geo

மூன்று மணித்தியாலங்கள்
Three Hours

**அறிவுறுத்தல்கள்:-**

* இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. பகுதி **I**, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி **I** இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்.
* பகுதி **II** இல் உள்ள வினாக்கள் **இரண்டிற்கும்** விடையளித்தல் வேண்டும். பகுதி **III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டிற்கு** விடையளித்தல் வேண்டும்.
* இப்பத்திரத்திலுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி, உலக புறவுருவப்படம் என்பன வழங்கப்படும்.
* இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக, இலங்கையின் 1:50000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப் படமும், வரைபுத்தாள் ஒன்றும் வழங்கப்படும்.

## பகுதி I

* **ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிகோட்டில் எழுதுக.**

1. *1:50000* அளவுத்திட்டத்தில் அமைந்த இலங்கையின் இடவிளக்கப்படத்தில் புவியில் $12Km^2$ **பரப்பினையுடைய** பயிர் செய்கை நிலமொன்று காட்டப்படுவது?

   1) 4cm  2) 8cm  3) 12cm  4) 32cm  5) 48cm  (.............)

2. இடவிளக்கப்படமொன்றில் **வங்கி, வைத்தியசாலை, தபால்நிலையம், பொலிஸ்நிலையம், நீதிமன்றம்** ஆகிய குறியீடுகள் உட்பட, முழு பிரதேசமும் சிவப்பு நிறத்தினால் காட்டப்படும் பிரதேசத்தை அழைப்பது?

   1) நகரக் குடியிருப்பு
   2) கிராம நகரக் குடியிருப்பு
   3) பெருந்தோட்டக் குடியிருப்பு



M.SUJINTHAN

4) புதிதாக அமைக்கப்பட்ட பிரதேசம்

5) கிராமியக் குடியிருப்புப் பகுதி (............)

**3.** இடவிளக்கப்படமொன்றில் **தரைத்தோற்ற அம்சங்களைக்** குறித்துக் காட்டுவது

1) காற்றிடைவெளி, குத்துச்சாய்வு, ஆறு, கடனீரேரி

2) மென்சாய்வு, குத்துச்சாய்வு, கடனீரேரி, காடு

3) உட்கிடை, நீரிடைவெளி, சுவடு, குன்று

4) பாறைத்தொடர், சுவடு, சேற்றுநிலம், மலையிடுக்கு

5) வெளியரும்பு பாறை, பீடபூமி, மரநிகர் வடிகால், சுவடு (............)

**4.** புவிநிலைச் செய்மதிகள் மேற்குக் கிழக்கான சுற்றுப்பாதையில் **மத்திய கோட்டு வலயத்திற்கு** மேலாக அண்ணளவாக எத்தனை ***Km*** உயரத்தில் பயணம் செய்கிறது?

1) 27000Km 2)30000Km 3)36000Km 4)42000Km 5)46000Km (............)

**5.** **எண்ணிலக்கப் படங்களைத்** தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவியாக காணப்படுவது பின்வருவனவற்றில் யாது?

1)தியோடலைற்று 2)வருடி (***Scanner***) 3)அளவு நாடா

4)பூகோள இடநிலையறி முறைமை(***GPS***) 5)திசைகாட்டி (............)

**6.** **தொலையுணர்வு** என்பது பின்வருவனற்றில் எதனைக் சரியாகக் குறிக்கின்றது?

1) மிக அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட தரவுகளை செயன்முறைப்படுத்தும் முறை

2) தொலைதூரத்திலுள்ள பகுதிகள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் முறை

3) இணையத்தினூடாகத் தரவுகளைப் பதிவிறக்கம் செய்யும் முறை

4) பூகோள இடைநிலைப்படுத்தல் முறையினூடாக தரவு சேகரிக்கக்கூடிய முறை

5) பொருளுடன் தொடர்பற்ற முறையில் தரவு சேகரிக்கக்கூடிய முறை (............)

**7.** புள்ளிவிபரத் தரவுத் தொடர் ஒன்றில் எந்தவொரு **ஒழுங்கமைப்புக்கும்** உட்படாத எண் பெறுமானத்தொகுதி எது?

1)இரண்டாம் நிலைத் தரவு 2) மீடிறன் 3) பச்சைத்தரவு 4) ஆகாரம் 5) ஈட்டு (............)

**8.** ஏறுவரிசையில் அல்லது இறங்கு வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட எண்கூட்டமொன்றினை பத்து சமபாகங்களாக பிரிக்கும் **ஒன்பது ஈட்டுக்கள்** எவ்வாறு அழைக்கப்படும்?

1) காலணைகள் 2) தசமணைகள் 3) சதமணைகள்

4) மாறல் திறன் 5) நியம விலகல் (............)

**9.** வரைபு ஒன்றில் இருக்க வேண்டிய **அடிப்படை அம்சம்** அல்லாதது?

1)மூலம் 2) சட்டகம் 3) திசை 4) குறியீட்டு விளக்கம் 5) தலைப்பு (............)

**10.** **கோட்டு நிரல்** வரைபடம் ஒன்றில் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமானது யாது?

1) ஒரு நாட்டின் இன ரீதியான சனத்தொகை

2) குறித்த நாட்டின் மழை வீழ்ச்சிப் பரம்பல்

3) ஒருநாட்டின் கால ரீதியிலான ஏற்றுமதி

4) குறித்த ஓர் இடத்தின் மாதாந்த வெப்பநிலை, மழைவீழ்ச்சி

5) ஆண், பெண் வயது அடிப்படையிலான சனத்தொகை (............)



M.SUJINTHAN

***11.*** பின்வரும் கூற்றுக்களுள் எச்சூழல் தொகுதி ஒன்றில் உள்ள **உயிர்சாரா மூலக்கூறுகள்** மூன்றினைச் சரியாகத் தருகின்றது?

1) ஞாயிற்றுச் சக்தி, பாறைகள், தாவரங்கள்
2) ஞாயிற்றுச் சக்தி, நீர், கனியங்கள்
3) ஞாயிற்றுச் சக்தி, தாவரம், மண்
4) ஞாயிற்றுச் சக்தி, பாறைகள், தாவரங்கள்
5) ஞாயிற்றுச் சக்தி, நீர், வளி (............)

***12.*** புவியின் **இடையோட்டினில்** பிரதானமாகக் காணப்படும் மூலகங்களில் பின்வரும் தொகுதி யாது?

1) சிலிக்கன்,நிக்கல்,தோரியம்
2) அலுமினியம்,வைரம்,தோரியம்
3) சிலிக்கன்,இரும்பு,மக்னீசியம்
4) செப்பு,நாகம்,அலுமினியம்
5) செப்பு, மக்னீசியம்,நிக்கல்

***13.*** பாறைச் சேர்க்கைகளில் **"தளர் பாறைப் படை"** எனும் பதம் குறித்து நிற்பது?

1) அரித்தலாலும், படிதலாலும் பெறப்படும் பாறைத் துண்டுகளின் சேர்க்கை
2) வெப்பத்தினாலும் அமுக்கத்தினாலும் உருமாற்றத்திற்குட்பட்ட பாகைளின் சேர்க்கை
3) எரிமலையினாலும், நிலச்சரிவுகளினாலும் குவிந்தள்ள பாறைகளின் சேர்க்கை
4) பிரிந்தழிதலாலும், படிதலாலும் பெறப்படும் பாறைத்துண்டுகளின் சேர்க்கை
5) கொண்டு செல்லல் முறைகளினால் பெறப்படும் பாறைகளின் சேர்க்கை (............)

***14.*** **விசூவியஸ், எட்னா, காரக்கட்டோவா, பிஜியாமா** ஆகிய எரிமலைகள் அமைந்துள்ள நாடுகளை முறையே கொண்ட தெரிவு?

1) இத்தாலி, சிசிலி, இந்தோனேசியா, யப்பான்
2) இத்தாலி, சிசிலி, யப்பான், இந்தோனேசியா
3) இந்தோனேசியா, யப்பான், இத்தாலி, சிசிலி
4) பிலிப்பைன்ஸ், ஐஸ்லாந்து, ஹவாய், அமெரிக்கா
5) இந்தோனேசியா, யப்பான், இத்தாலி, சிசிலி (............)

***15.*** **பளிங்குருப் பாறைகளின்** இரண்டு முக்கிய அம்சங்கள்?

1) கனிப்பொருள்கள் பளிங்குருவாகிய நிலையிலும் பெருமளவில் உட்புகவிடும் பண்பினதாகவும் இருத்தல்.
2) கனிப்பொருள்கள் பளிங்குருவாகிய நிலையிலும் பெருமளவில் உட்புகவிடாததாயுமிருத்தல்
3) கனிப்பொருள்கள் பளிங்குருவாகிய நிலையிலும் தின்னலினால் பெருமளவிற்குப் பாதிக்கப்படக் கூகூடியதாகவுமிருத்தல்.
4) கனிப்பொருள்கள் பளிங்குருவாகிய நிலையிலும் பெருமளவில் உயிரினவியலுக்குரிய வானிலையாலழிதலினால் பாதிக்கப்படக் கூடியதாகவுமிருத்தல்
5) பளிங்குருத்தன்மைகள் குறைவாகக் காணப்படுதல் (............)



M.SUJINTHAN

**16.** இலங்கையின் **அயன மழைக்காடுகளின்** பிரதான பண்புகளில் ஒன்று?

1) உயரமான மரங்கள் நெருக்கமாக அமைந்திருக்கும்
2) தரைமட்டத்தில் காணப்படும் இலைகள் மிகச்சிறியவை
3) தாவரப்படைகள் அதிகளவில் காணப்படமாட்டாது
4) குறைந்தளவான தாவரப் பல்வகைமை காணப்படும்
5) மே – செப்ரம்பர் வரையில் வரட்சியான பருவம் காணப்படும்

**17.** மண் அரை வெப்பநிலையில் உலர்த்துவதன் மூலம் அகற்றக் கூடியதும் தாவர வேர்களினால் அகத்துறிஞ்சக் கூடியதமான **மண்ணீர்** வகையைக் குறிப்பது

1)பருகுநீர் 2)ஈர்ப்புநீர் 3)ஆவியாக்க நீர்
4)மயிரிழை நீர் 5)ஒட்டவிசைநீர் (............)

**18.** பூகோள பச்சை வீட்டு வாயுக்களை உற்பத்தி செய்து வெளியிடும் துறைகளில் **முதன்மையான துறையாக** விளங்குவது யாது?

1)கைத்தொழில் 2)காடழிப்பு 3)விவசாயம்
4)சக்தி வலுத்துறை 5)போக்குவரத்து (............)

**19.** **கலிடோனியன், கேர்சீனியன்** மலையாக்கத்தில் தோன்றிய பழைய மடிப்புக்களை சரியாக் காட்டும் விடை பின்வருவனவற்றில் எது?

1) அற்லஸ், பிறனீஸ் 2) றொக்கி அந்தீஸ் 3) அப்பலாச்சியன், பெரிய பிரிப்பு
4) யூரல், றொக்கி 5) யூரல், இமயம் (............)

**20.** இலங்கை காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடகளின் திட்டமிட்ட உடன்படிக்கையின் **பங்குதாரரரான** ஆண்டு?

**1)1945** 2) **1950** 3) **1993** 4) **1998** 5) **2000** (............)

**21.** இலங்கையின் இரண்டாவது **மொன்சூன்** காலம் என்பது?

1) ஒக்டோபரில் இருந்து நவம்பர் வரை 2)மார்ச்சிலிருந்து ஏப்ரல் வரை
3) மேயிலிருந்து செப்ரம்பர் வரை 4)டிசம்பரிலிருந்து பெப்ரவரி வரை
5) நவம்பரிலிருந்து ஜனவரி வரை (............)

**22.** காற்றுச் சுற்றோட்டத்தினைப் **பாதிக்கின்ற** இரு முக்கிய காரணிகளான?

1) புவிச்சுழற்சியும் சூரியனை நோக்கிய அதன் சாய்வும் ஆகும்.
2) கண்டங்கள், சமுத்தரங்களின் சமமற்ற பரம்பல் ஆகும்
3) அமுக்கச்சாய்வு, விகித விசையும், கொறியோாலிஸ் விசையும்
4) உராய்வும், புவிச்சுழற்சியும் ஆகும்
6) நீரோட்டங்களும் புவிச்சுழற்சியும் (............)

**23.** உலக **மண் தினம், புவித்தினம்** ஆகியவை இடம்பெறும் நாட்கள் முறையே?

1) மார்ச் 05ம் திகதி, செப்ரம்பர் 22ம் திகதி ஆகும்.
2) ஏப்ரல் 06ம் திகதி, மார்ச் 08ம் திகதி ஆகும்
3) ஜனவரி 01ம் திகதி, ஒக்ரோபர் 17ம் திகதி ஆகும்.

M.SUJINTHAN

4) டிசம்பர் 05ம் திகதி, ஏப்ரல் 22ம் திகதி ஆகும்.

5) ஜுன் 05ம் திகதி, ஏப்ரல் 21ம் திகதி ஆகும். **(............)**

**24.** வட அகலக்கோடு 10 பாகைக்கும், தென் அகலக்கொடு 10 பாகைக்கும் இடையில் பரந்தள்ள **உயிரினக் கூட்டம்?**

1)அயன மழைக் காடுகள் 2) இடை வெப்பக் காடுகள் 3)மத்திய தரைக் காடுகள்

4)சவன்னாக்கள் 5) பாலைவனங்கள் **(............)**

**25.** பின்வருவனவற்றில் எது இலங்கையில் உள்ள நான்கு **நீண்ட ஆறுகளைத்** தருகின்றது?

1) மகாவலி கங்கை, வளவ கங்கை, மாதுறு ஓயா, கும்புக்கன் ஓயா
2) மகாவலி கங்கை, களனி கங்கை, தெதுறு ஓயா, களுகங்கை
3) மகாவலி கங்கை, கிரிந்தி ஓயா, கிங்கங்கை, யான் ஓயா
4) மகாவலி கங்கை, அருவி ஓயா, காலாறு ஓயா, களனி கங்கை
5) மகாவலி கங்கை, உடவளவை கங்கை, மாதுறு ஓயா **(............)**

**26.** இலங்கையின் **மத்திய சூழலியல் அதிகார சபையின்** பிரதான செயற்பாடு?

1) கிராமிய சமூகங்களிற்கு இயற்கை அனர்த்தம் முகாமைத்துவம் பற்றிய அறிவைப் பரப்புதல்
2) நகரப் பகுதிகளில் சூழல் நேய அபிவிரத்திச் செயற்றிட்டங்களை அமுல் படுத்துதல்
3) புதிய அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடங்கப்படுவதற்கு முன்னர் சூழலியல் தாக்க மதிப்பீட்டினை மேற் கொள்ளத் தீர்மானித்தல்
4) சூழலியல் முக்கியத்துவம் தொடர்பாக பாதுகாக்கப்பட்ட பகுதிகளைப் பிரகடனப்படுத்துதல்
5) பிரதேச மட்டத்திலுள்ள சூழலியல் நிறுவனங்களைப் பதிவு செய்தல் **(............)**

**27.** **நிலையான சனத்தொகை கூம்பொன்றின்** பண்பினை சரியாகக் காட்டும் விடை யாது?

1) முதியோர் சனத்தொகை அதிகரிப்பு
2) சுனத்தொக அளவில் வீழ்ச்சிப் போக்கு
3) குழந்தைகள் சிறுவர் தொகை அதிகரப்பு
4) சனத்தொகையின் விரைவான அதிகரிப்பு
6) சனத்தொகையின் தற்போதைய மட்டத்தில் உறுதியான நிலை **(............)**

**28.** சனத்தொகை **கட்டமைப்பு** என்பது?

1) வயது மற்றும் பால் அடிப்படையில் சனத்தொகையை காட்டுவது
2) இன, மத மற்றும் மொழி அடிப்படையில் சனத்தொகையை காட்டுவது
3) சனத்தொகையை சீராக பேணுல்
4) சனத்தொகையை ஒழுங்கமைத்தல்
5) வயது ரீதியாக சனத்தொகையை பேணல் **(............)**

M.SUJINTHAN

**29.** சர்வதேச குடிப்பெயர்வின் **முனைப்பான பண்பாக** அமைவது?

1) அபிவிருத்தி அடைந்த நாடுகளிலிருந்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை நோக்கிய பெயர்வு காணப்படுதல்
2) கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கிய பெயர்வாக காணப்படல்
3) அரசியல் தஞ்சம் கோரி இடப்பெயர்வு ஏற்படுதல்
4) இளவயதினர் அதிகளவில் பெயர்கின்றமை
5) ஆபிரிக்க நாடுகளிலிருந்து ஸ்கண்டி நேவிய நாடுகளை நோக்கிய பெயர்வு காணப்படுகின்றது (............)

**30.** 2015 தரவுப்படி **வறுமைக் கோட்டின் கீழ்** தென்னாசியாவில் வாழ்பவர்கள் தொகை?

1) 30.5 மில்லியன் 2) 702.2 மில்லியன் 3) 244.3 மில்லியன்
4) 260.5 மில்லியன் 5) 231.3 மில்லியன் (............)

**31.** அண்மைக்காலத்தில் உலகில் வருடாந்த குடித்தொகை வளர்ச்சி வீதம் **மிகக் குறைந்தளவும், மிகக் கூடியளவுமான** நாடுகளின் முறையே?

1)ஹங்கேரி, ரூவாண்டா 2)நோர்வே, பிரித்தானியா 3)டென்மார்க், ரூவாண்டா
4)பல்கேரியா, சீனா 5)பிரித்தானியா, சாட் (............)

**32. நிலைத்திருக்ககூடிய அபிவிருத்தி** நடவடிக்கைகளை மேற்கொள்வதில் விருத்தியடைந்த வரும் நாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்?

1) சனத்தொகை அதிகரிப்பும் நுகர்தேவை அதிகரிப்பும்
2) வறுமையும் பொருளாதார வளர்ச்சிக்கு வளங்களின்மையும்.
3) சூழலைப் பாதுகாக்கபோதிய அளவு, மூலதனம், தொழில் நுட்பமின்மை.
4) அந்நியச் செலாவணிக்காக இயற்கை வளங்களை விற்க வேண்டியிருத்தல்
5) மேற்கூறிய யாவும் சரி (............)

**33.** உலகில் **மிகக் குறைந்த பிறப்பு வீதத்தினை** கொண்ட நாடு எது?

1) நைஜர் 3) யப்பான் 5) பாகிஸ்தான்
2) மாலி 4) மொராக்கோ (............)

**34.** அண்மை காலமாக ஐக்கிய அமெரிக்காவின் இரும்புருக்கு கைத்தொழில் **வீழ்ச்சிக்கான பிரதான** காரணம்?

1) இரும்புருக்குப் பகுதிகளில் தொழிலாளர் சங்கங்களின் விருத்தி
2) இரும்புத்தாது குறைவடைந்தமை
3) நிலக்கரிப் படிவுகள் பற்றாக்குறையாக காணப்பட்டமை
4) தொழிலாளரின் வினை திறனின்மை
5) சூழல் மாசடைவு அதிகமாக ஏறப்பட்டமை (............)

**35. சேதன விவசாயத்தினூடாக** உணவு உற்பத்தியை விரைவாக அதிகரித்த காலப்பகுதியாக அறியப்படுவது?

1)**1945**இன் பின் 2) **1964**இன் பின் 3) **1990**இன் பின்
4) **1998**இன் பின் 5) **2000** இன் பின் (............)

M.SUJINTHAN

***36.*** *1980* இல் **பசுமைப்புரட்சி** தொடர்பாக நிறுவப்பட்ட சபை பின்வருவனவற்றுள்?

*1)* உலக உணவு நிறுவனம்

*2)* சர்வதேச நெல்லாரச்சி நிறுவனம்

*3)* ஆசியான்

*4)* சர்வதேச விவசாய ஆராய்ச்சி தொடர்பான ஆலோசனை சபை

*5)* ரொக்பெலர் அமைப்பு ***(.............)***

***37.*** விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்காக **சந்தைப்படுத்தல் செயன் முறையின்** பிரதான விடையங்களாவன

*1)* கொள்கை, பல்தேசியக்கம்பனி, விவசாய முயற்சி, விவசாய முறை, சந்தைத் தகவல்

*2)* ஊக்குவிப்பு, சந்தைகள், விவசாய முயற்சி, விவசாய முறை, சந்தைத் தகவல்

*3)* கொள்கை,கிராமிய சந்தை விரிவாக்கல், விவசாய முறை, சந்தைத் தகவல்

*4)* நீர்ப்பாசனம்,கிராமிய சந்தை விரிவாக்கல், விவசாய முறை, சந்தைத் தகவல்

*5)* சந்தைப்படுத்தல், விவசாய முறை, முதலீடு, நுகர்வு அதிகரிக்கச் செய்தல் ***(.............)***

***38.*** தெற்காசிய நாடகளின் அமைப்பான சார்க் நாடுகளில் **எழுத்தறிவு வீதம் குறைவான** நாடு எது?

*1)*பூட்டான் *2)*பங்களாதேஷ் *3)*நேபாளம்

*4)*ஆப்கானிஸ்தான் *5)*பாகிஸ்தான் ***(.............)***

***39.*** உலகின் மிகப் பெரிய கண்டமான ஆசியாவில் காணப்படும் ஓர் **உயர்கைத்தொழில் பூங்கா**?

*1)* கொம்பினாட்ஸ் *2)* இசிகா *3)* சுக்குபா *4)* டோக்கியோ *5)* வாஜிமா ***(.............)***

***40.*** கனிய நெய் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தை கட்டுப்படுத்தும் பிரதான நிறுவனமான **"ரோயல் டச் சேல்"** காணப்படும் நாடு?

*1)*சவுதி அரேபியா *2)*நெதர்லாந்து *3)*பிரித்தானிய


*4)*ஜக்கிய அமெரிக்கா *5)*தென் ஆபிரிக்கா ***(.............)***

M.SUJINTHAN

## பகுதி II

**1.** இலங்கை நில அளவைத் திணைகக் ளத்தினால் வெளியிடப்பட்ட ***1:50,000*** என்ற அளவுத்திட்டத்திலமைந்த **மகியங்கனை** இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி ***20*** மீற்றர்களாகும். இப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> **குறிப்பு:** படத்தின் மேல் விடைகள் எழுதப்படலாகாது. விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், உப பிரிவு இலகக்த்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.



***(i)*** படத்தில் ***1 – 6*** வரை இலக்கமிடப்பட்டு குறித்துக் காட்டப்படும் **நிலவுருவங்களைப்** பெரியடுக

(***2*** புள்ளிகள்)

***(ii)*** படத்தில் **A - B** இனால் காட்டப்படும் பகுதியின் **குறுக்குவெட்டு முகத்தை** வரைக ?

(***2*** புள்ளிகள்)

***(iii)*** படத்தில் ***C – D*** காட்டப்படும் நிலவுறுப்பினைப் பெயரிடுக? (***1*** புள்ளிகள்)

***(iv)*** படத்தில் நாற்பக்கல் ***a*** இனால் காட்டப்படும் பகுதியின் நாற்பக்கலினை ***1: 25, 000*** என்னும் அளவுத்திட்டத்தில் வரைந்து **நேர்கோட்டு அளவுத்திட்டத்தை** வரைக? (***3*** புள்ளிகள்)

***(v)*** படப்பிரதேசத்தில் குடியிருப்பின் பரம்பலில் தாக்கம் செலுத்தியுள்ள **மூன்று** காரணிகளினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (***4*** புள்ளிகள்)

***(vi)*** படப்பிரதேசத்தில் பிரதான பௌதிக அம்சத்திற்கும் மனித நடவடிக்ககைகளிற்கும் இடையிலாலன தொடர்பினை ஆராய்க? (***4*** புள்ளிகள்)

***(vii)*** படப்பிரதேசத்தின் **வடிகாலமைப்புத்** தொடர்பாக ஆராய்க? (***4*** புள்ளிகள்)

**2.** அரசியல் எல்லைகளைக் காட்டும் உலகப்படமொன்று **(வரைபடம் *A*)** உமக்கு வழங்கப்பட்டுள்ளது. பொருத்தமான குறியீடுகள் மற்றும் நிறங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

***1)*** சியாரா நிவாடா மலைத்தொடர்

***2)*** கொங்கோ குடியரசு

***3)*** ஹம்போல்ட் நீரோட்டம்

***4)*** கார்பன்ரேரிய விரி குடா

***5)*** பிறேயரீஸ் புல்வெளி

***6)*** ***66 1/2$^0$*** வட அகலக்கோடு

***7)*** ஆசிய பசுபிக் நாடகளில் மிக வேகமான பொருளாதார வளர்சியடையும் **தெற்காசிய நாடாக** அறிவிக்கப்பட்டுள்ள நாடு?

***8)*** அண்மைக்காலமாக **பேரளவில் காடழிப்பு** இடம்பெறுகின்ற தென்கிழக்காசிய தீவு?

***9)*** உலக சுகாதார நிறுவனத்தின் **தலைமையகம்** அமைந்தள்ள நகரம் யாது?

***10)*** **2020** ஆண்ட அறிக்கையின் படி மிக உறுதியான கடவுச்சீட்டை கொண்ட நாடு?

(***10*** புள்ளிகள்)

M.SUJINTHAN

## பகுதி *III*

***3.***

***(i)*** புவியியல் தகவல் முறைமையில் பயன்னடுத்தப்படும் **உள்ளீட்டுச் சாதனாங்கள் வெளியீட்டு சாதனாங்கள், தரவு சேகரிப்பு** சாதனங்கள் இவ்விரண்டினைக் குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

***(ii)*** **காவித்தரவு (Vector)** என்றால் என்ன? அவற்றின் நன்மை, தீமைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (***5*** புள்ளிகள்)

***(iii)*** தரவு முகாமைத்துவம் மற்றும் பகுப்பாய்வில் புவியியல் தகவல் முறைமைத் தொழில்நுட்பத்தின் செயற்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக?(***6*** புள்ளிகள்)

***4.***


***(i)*** **தரவு** என்றால் என்ன அவற்றின் விசேட பண்புகள் **இரண்டினை** குறிப்பிடுக? (***3*** புள்ளிகள்)

***(ii)*** **முதன்மைத்தரவு** சேகரிக்கும் முறைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றிற்கான உதாரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக (***4*** புள்ளிகள்)

***(iii)*** தரவுகளில் தொடர்ச்சியான தரவு என்ன என்பதை சுருக்கமாக விளக்கி உதாரணங்கள் **இரண்டினை** குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

***(iv)*****தொகை மதிப்பு** முறை எனபதால் நீர் விளங்கிக் கொள்வத யாது? அவற்றின் நன்மைகள் இரண்டினை குறிப்பிடுக? (***4*** புள்ளிகள்)

***5.*** இலங்கையில் **பெரும்போக, சிறுபோக** நெல் உற்பத்தி போக்குகள் **2009 – 2017 (000 மெற்றிக்தொன்கள்**) வரையான எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணை வரைபு இனங்காட்டி நிற்கின்றது.




SUJINTHAN

*(i)* மேலே தரப்பட்ட வரைபடத்தின் வகையினை **பெயரிடுக**? (*2* புள்ளிகள்)

*(ii)* வரைபடத்தில் இலங்கையின் பெரும்போக, சிறுபோக நெல் உற்பத்தியின் முனைப்பான **இரண்டு அம்சங்களை** விவரிக்க. (*4* புள்ளிகள்)

*(iii)* மேலே தரப்பட்ட வரைபடத்தின் **இரண்டு பயன்பாடுகளை** ஆராய்க?(*4* புள்ளிகள்)

*(iv)* இதே வகையான தகவல்களினை எடுத்துக் காட்டுவதற்கு மாற்றான **வேறொரு படவரைகலையியல்** முறையொன்றினை படக்குறிப்பொன்றின் மூலம் விவரிக்க? (*5* புள்ளிகள்)

***6.*** அட்டவனையில் தரப்பட்ட தரவுகளை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

***தரம் 11 இல் கணிதபாட இரண்டாம் தவணைப் பரீட்சையில் 30 மாணவர்கள் பெற்ற புள்ளிகள்***

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 47 | 48 | 46 | 57 | 52 | 33 | 81 | 42 | 67 | 55 |
| 41 | 22 | 32 | 11 | 73 | 47 | 19 | 37 | 58 | 62 |
| 46 | 77 | 48 | 52 | 48 | 62 | 50 | 42 | 70 | 30 |

*(i)* புள்ளிகளினை அடிப்படையாகக் கொண்டு **கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல்** அட்டவனையினை தயாரிக்குக? (**5 வகுப்பாயிடை** ) (*2* புள்ளிகள்)

*(ii)* இத்தரவிற்கான **இடை, திரட்டு மீடிறன்** என்பவற்றைக் காண்க? (*5* புள்ளிகள்)

*(iii)* மேலே அமைக்கப்பட்ட கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல் அட்டவனையினைக் கொண்டு **இழைய வரைபு, மீடிறன் பல்கோணி** என்பவற்றை அமைக்குக? (*4* புள்ளிகள்)

*(iv)* உம்மால் அமைக்கப்பட்ட மீடிறன் பரம்பலை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் பெற்ற புள்ளிகள் பற்றி **சுருக்கமாக** விபரிக்குக? (*4* புள்ளிகள்)

M.SUJINTHAN